ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2104/9 - 2018 දෙසැම්බර් මස 31 වැනි සඳුදා - 2018.12.31

*2104/9 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 6/2001* (iv)

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம்**

*இரண்டாயிரமாம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

கொழும்பு,
*2018, திசெம்பர் 31.*

ஒழுங்குவிதிகள்

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான, 2005, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிய 1414/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஒழுங்குவிதிகள், அதன் 3 ஆம் ஒழுங்குவிதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :-

"3. காப்புறுதியாளரொருவர், இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு ஆண்டுக் கட்டணமாகப் பின்வருவனவற்றைச் செலுத்துதல் வேண்டும் :-

(அ) முதலாவது பஞ்சாங்க தொழிற்பாட்டாண்டுக்காக ஒரு இலட்சம் ரூபாவான பணத்தொகை ;

ஆயின், 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் 53 ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் காப்புறுதியாளர், முதலாவது பஞ்சாங்க தொழிற்பாட்டாண்டுக்காக மொத்த எழுத்திலான கட்டுப்பணத்தின் 0.125 சதவீதத்தினை ஆண்டுக் கட்டணமாக இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்குச் செலுத்துதல் வேண்டும் ; அத்துடன்

1A - G 28933 — 407 (2018/12)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) இரண்டாவது பஞ்சாங்க தொழிற்பாட்டாண்டு தொடங்கியதிலிருந்தும் அதன் பின்னரும் -

(i) காப்புறுதித் தொழில் தொடர்பில் இரண்டு இலட்சம் ரூபாவான பணத்தொகை ; அல்லது

(ii) முற்போந்த நிதியாண்டின் காப்புறுதித் தொழிலின் மொத்த எழுத்திலான கட்டுப்பணத்தின் 0.125 சதவீதம்,

இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ அது.”.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.